# ஒற்றுமைக்கும் பிரிவினைக்கும் இடையே நடக்கும் தேர்தல்!

## தோழர் என். பாண்டிக்கு ஆதரவாக பழனியில் நடிகர் பிரகாஷ் ராஜ் பேச்சு!

திண்டுக்கல்,ஏப்.22-

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் பழனி சட்டமன்றத்தொகுதி சிபிஎம் வேட்பாளர் தோழர் என். பாண்டிக்கு ஆதரவாக திரைக்கலைஞர் பிரகாஷ் ராஜ் பழனியில் பிரச்சாரம் செய்தார்.அப்போது பேசிய அவர் இது ஒற்றுமைக்கும் பிரிவினைக்கும் நடுவே நடக்கும் தேர்தல். இந்தி, நீட் என எதைத் திணித்தாலும் இன்னும் வலுவாக எதிர்த்து நிற்கவேண்டும் என்றால் எந்த அணிக்கு வாக்கு போட வேண்டும் என்பதை நீங்கள்தான் முடிவெடுக்க வேண்டும் எனவும் அவர் அழைப்பு விடுத்தார்.

அவர் பேசியதாவது, இன்றைக்கு நான் இங்கே நடிகனாகவோ, நடிகன் என்ற அடையாளத்தை பயன்படுத்தி உங்கள் அன்பை தவறாகப் பயன்படுத்திக்கொள்ளவோ வரவில்லை. நடிகனின் தொழில் வேறு. அதில் கொஞ்சம் திறமை இருந்தது, அதை வளர்த்தது நீங்கள்தான். நேரம் செலவழித்து படம் பார்த்தது நீங்கள், காசு கொடுத்தது நீங்கள். என் குடும்பம் நல்லாக இருக்கிறது. ஆனால் அந்த காசை திருப்பிக் கொடுக்க முடியாது. அன்புக்கு என்ன கொடுக்க வேண்டும்? அதற்கு பதில் சொல்லவே இங்கே வந்திருக்கிறேன்.

ஒரு கலை, ஒரு பாடல், ஒரு கலைஞன் என்பது வெறும் பொழுதுபோக்கிற்காக மட்டுமல்ல. இப்படிப்பட்ட மேடைகளுக்கும் பயன்படவேண்டும். ஒரு கலைஞன் என்பவன் ஒரு சமுதாயத்தினால் உருவாக்கப்பட்டவன். நாட்டிற்கும் மக்களுக்கும் பிரச்சினை வரும்போது வரவேண்டியது அவனது கடமை.

மோடியும் அ.தி.மு.க.வும் டபுள் என்ஜின் சர்க்கார் இல்லை, டப்பா சர்க்கார். என்ஜின் அங்கே இருக்கிறது, மோடிதான் ஸ்டேஷன் மாஸ்டர். எல்லாவற்றையும் அவர்தான் தீர்மானிக்கிறார். இந்த டப்பாக்கள்தான் இங்கே நிற்கின்றன. அதைப் பற்றி மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

### முருகனை திருடும் கும்பல்

சாமி சிலைகளைத் திருடும் கும்பலைப் பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். இப்போது முருகனையே திருட வந்திருக்கும் கும்பல் இங்கே வந்திருக்கிறது. பழனி அவனுக்கு முப்பாட்டன் என்று கதை விடுகிறார்கள். இது அறிவில்லாத வார்த்தைகள். பழனி முருகன் தமிழ்க் கடவுள். அதை அறிய கொஞ்சம் வரலாறு தெரிய வேண்டும், தொல்லியல் தெரிய வேண்டும். தெரியாவிட்டால் விட்டு விடுங்கள்.



### மூன்று மாடல்களுக்கான தேர்தல்

இந்தத் தேர்தலை மூன்று மாடல்களுக்கான தேர்தலாக பார்க்க வேண்டும். நான் அரசியல்வாதி கிடையாது, எந்தக் கட்சிக்காரனும் கிடையாது. உங்களைப் போல நானும் ஒரு வாக்காளன்தான். இந்த மூன்று மாடல்கள் என்ன கொடுக்கின்றன என்று பேசுவோம்.

### திராவிட மாடல்.

திராவிட மாடல் கல்வி கொடுத்தது. இந்தியாவிலேயே ஒரு மாநிலம் இப்படி இருக்க வேண்டும் என்ற பெருமையை சேர்த்தது. மொழி உரிமையை காப்பாற்றியது. இப்போது இன உரிமையை காப்பாற்றுவதற்காகப் போராடுகிறது. இதுதான் திராவிட மாடல்.

### அடிமை மாடல்.

நம்முடைய தன்மானத்தையும் சுயமரியாதையையும் தூக்கிக்கொண்டு போய் மோடியின் காலடியில் வைக்க வேண்டும் என்பதுதான் இந்த மாடல். அவர்கள் வெளியிலிருந்து பாஜக எனும் பாம்பை உள்ளே அழைத்து வருகிறார்கள்.

அமலாக்கத்துறை உள்ளிட்ட அமைப்புகளை வைத்து மாற்றுக் கருத்துள்ளவர்களை பாஜக ஒடுக்குகிறது. இறுதியில் அந்த "பாம்பு" தன்னை அழைத்தியது வந்தவர்களையும் ஆதிக்கம் செய்யத்துவங்கும். இதுதான் அடிமை மாடல். இந்த மாடலுக்கு வெட்கம், சூடு, சொரணை கொஞ்சமும் இல்லை.

நாடாளுமன்றத்தில் டீலிமிடேஷன் கொண்டு வந்துள்ளார்கள். இந்த டீலிமிடேஷன் நிறைவேறி விட்டால் 50 ஆண்டு காலத்திற்கு தென்னிந்தியாவின் அரசியலே மாறிவிடும். இது மக்கள் தொகையைக் கட்டுப்படுத்திய தென்னிந்திய மாநிலங்களின் அரசியல் பிரதிநிதித்துவம் குறையும்.

மக்கள்தொகை பெரும்பான்மையை வைத்து எல்லாவற்றையும் தீர்மானிக்கலாமா? பெரும்பான்மை இருந்தால் அரசியலில் ஜெயிக்கலாம், ஆட்சி பிடிக்கலாம். அதுவரைதான் பெரும்பான்மை. அதற்கப்புறம் சமத்துவம், சகோதரத்துவம் பேசவேண்டும்.

திருப்பரங்குன்றத்தில் என்ன நடக்கிறது என்று உங்களுக்குத் தெரியும். மதுரையை இன்னொரு மணிப்பூராக ஆக்கப் போகிறார்கள், அங்கிருந்து நேரடியாக பழனிக்கு வருவார்கள். இதுதான் இவர்களின் வேலை. பழனியை "முப்பாட்டன்" என்று சொல்கிறார்கள். கிறிஸ்தவர்கள் அதிகமாக இருந்தால் "பெத்தலகேம் இந்தியாவில்தான் இருந்தது, இயேசு இங்கேதான் பிறந்தார்" என்று சொல்லியிருப்பார்கள். இவர்களுக்கு இந்துக்கள் மேல் அன்பு இல்லை. அதிகாரம் வேண்டும், அது மட்டும்தான் வேண்டும். இதற்கு பதில் சொல்ல வேண்டியது இந்தத் தேர்தல்.

### சினிமா மாடல்

சினிமாவில் ஒரே படத்தில் காசு சம்பாதிக்கலாம், பெரிய ஹீரோ ஆகலாம், ஸ்டார் ஆகலாம், டாக்டர் ஆகலாம், இன்ஜினியர் ஆகலாம், முதலமைச்சர் கூட ஆகலாம். ஆனால் அரசியலிலேயே அப்படியே முதலமைச்சர் ஆகிவிடுவீர்களா?

அரசியல் பேசவேண்டியவர் யார்? என்ன கேள்வி எழுப்பிய அவர் நான் பேசிய அளவு அரசியலாவது விஜய் பேசி இருக்கிறாரா ? இத்தனை வருடங்களில் தமிழ்நாட்டிற்கோ, மக்களுக்கோ, மொழிக்கோ பிரச்சினை வந்தபோது வந்து நின்றாரா ? என கேள்விகள் எழுப்பினார். மக்கள் உங்கள் மீது வைத்திருக்கும் நட்பும் அன்பும் உங்கள் திறமைக்கானதே தவிர அரசியலுக்கானதல்ல. நடிகனை மிகவும் பிடித்தால் விசில் அடிக்கலாம். நாட்டை கொடுக்கவோ கொடுக்கக் கூடாது. அரசியல் வேறு, சினிமா வேறு. அந்த அன்பு வேறு, இந்த அன்பு வேறு.

அரசியலுக்கு இறங்க வேண்டும், மக்களிடம் பேச வேண்டும் என விமர்சித்தார். எனவே திராவிட மாடல் வேண்டுமா? அடிமை மாடல் வேண்டுமா? சினிமா மாடல் வேண்டுமா? என முடிவெடுங்கள் என கூறினார்.

மேலும் மக்களாகிய நாம் தான் அரசியல் செய்ய வேண்டும், ஜெயித்தவர்கள் வேலை பார்க்க வேண்டும்.

ஆனால் இந்தியாவில் ஜெயித்தவர்கள் அரசியல் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள், நாம் வேலை பார்த்துக்கொண்டிருக்கிறோம் அதை மாற்றவேண்டும் என்றார்.

### ஒற்றுமைக்கும் பிரிவினைக்கும் இடையேயான தேர்தல்

இது அ.தி.மு.க. அணிக்கும் தி.மு.க. அணிக்கும் நடக்கும் தேர்தலோ. விஜய் சொல்வதுபோல் தமிழக வெற்றிக்கழகத்திற்கோ தி.மு.க.வுக்கும் இடையேயான தேர்தலோ அல்ல. இது ஒற்றுமைக்கும் பிரிவினைக்கும் நடுவே நடக்கும் தேர்தல்.

தமிழ்நாடு எப்போதுமே இந்தியாவிற்கு ஒரு மாதிரியாக நின்றிருக்கிறது. இந்தி திணிக்கட்டும், நீட் திணிக்கட்டும் எதை திணிக்கும் போதும் எதிர்த்து நிற்க வேண்டும்.

இன்னும் வலுவாக நிற்க வேண்டும் என்றால் எந்த அணிக்கு வாக்கு போட வேண்டும் என்பதை நீங்கள்தான் முடிவெடுக்க வேண்டும்.

அரசியலை மக்களாகிய நாம் செய்ய வேண்டிய நிலை வந்துவிட்டது. ஒற்றுமையா? பிரிவினையா? தேர்ந்தெடுங்கள் என அவர் பேசினார்.



மதுரை மாநகர் மாவட்ட திமுக சார்பில் சுதந்திர போராட்ட வீரர் சின்னமருது அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு தெப்பக்குளத்தில் உள்ள அவரது சிலைக்கு வடக்கு தொகுதி கழக வேட்பாளர், மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் மாவட்ட துணை செயலாளர் மூவேந்திரன், மாநில அணி நிர்வாகி பாக்கியநாதன், பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ.கே.ஆறுமுகம், ரவீந்திரன், பகுதிச் செயலாளர்கள் முகேஷ் சர்மா, அறிவுநிதி, இளைஞர் அணி ராம்பிரசாத் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் பங்கேற்றனர்.

## களத்தில் இளைஞர் அணி

### மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து, கழக இளைஞர் அணி நிர்வாகிகள் வீடு வீடாகச் சென்று, வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு:




பென்னாகரம் சட்டமன்றத் தொகுதி,
தருமபுரி கிழக்கு மாவட்டம்.




வீரபாண்டி சட்டமன்றத் தொகுதி,
சேலம் கிழக்கு மாவட்டம்.




மேலூர் சட்டமன்றத் தொகுதி,
மதுரை வடக்கு மாவட்டம்.




கீழ்வேளூர் சட்டமன்றத் தொகுதி,
நாகப்பட்டினம் மாவட்டம்.




பேராவூரணி சட்டமன்றத் தொகுதி,
தஞ்சாவூர் தெற்கு மாவட்டம்.




ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதி,
திருநெல்வேலி மேற்கு மாவட்டம்.




கீழ்பென்னாத்தூர் சட்டமன்றத் தொகுதி,
திருவண்ணாமலை தெற்கு மாவட்டம்.




அரக்கோணம் சட்டமன்றத் தொகுதி,
இராணிப்பேட்டை மாவட்டம்.




திரு.வி.க.நகர் சட்டமன்றத் தொகுதி,
சென்னை கிழக்கு மாவட்டம்.